# ஒன்றுப்பட்ட போராட்டம்
# ஒன்றே நமது துயரோட்டும்

அருமைத் தோழர்களே !

சமீபத்தில் நம்பூதிரி கூட்டணி தனித்து நடத்திய இரண்டு நாள் வேலை நிறுத்தம் நாடு தழுவிய அளவில் படுதோல்வி அடைந்ததை அனைவரும் அறிவீர்கள். அனைத்து சங்கங்களையும் ஒன்றிணைத்து போராட தவறியதால் தான் அந்த போராட்டம் தோல்வியுற்றது. குறிப்பாக **NFTE-BSNL, FNTO** சங்கங்கள் பங்கெடுக்காத எந்த போராட்டமும் இங்கு இனி வெற்றிப் பெறாது என்பது மீண்டும் நிரூபணமாகிவிட்டது. அந்த போராட்டம் நாடு தழுவிய அளவில் சேவையில் பெரிதாக பாதிப்பை ஏற்படுத்தாததால் தான் நிர்வாகம் அங்கீகரிக்கப்பட்ட சங்கத்தை பேச்சுவார்த்தைக்கு கூட அழைக்காமல் உதாசீனப்படுத்தி விட்டது. வீம்புக்காக நடத்தப்பட்டதால் ஊழியர்கள் இருநாட்கள் ஊதியத்தை இழப்பது ஒன்றுதான் வேலைநிறுத்தத்தால் ஏற்பட்ட பயன்.

ஆனால் சிறிதும் கவலையின்றி நம்பூதிரிசங்கம் வழக்கம்போல தனது கோயபல்ஸ் பாணி பொய்ப்பிரச்சாரத்தை நடத்துகிறது. அவர்களது போராட்டம் வரலாறு காணாத வெற்றியாம் ! இது உண்மையா? 2000 செப்டம்பரில் **NFTE, FNTO, BTEF** சம்மேளனங்கள் தலைமையேற்று நடத்திய பென்ஷன் போராட்டத்தைவிட இது மகத்தானதா? லட்சோபலட்சம் ஊழியர்கள் அப்போராட்டத்தில் பங்கேற்று பென்ஷனை பாதுகாத்தது வரலாறு காணாத வெற்றி இல்லையா?

அந்த ஒன்றுப்பட்ட பேராட்டத்தில் பங்கேற்காமல் ஒதுங்கி நின்றதால் தான் நம்பூதிரிக்கு நாம் நடத்திய அந்த போராட்டத்தின் வரலாற்று சாதனை நினைவில் வரவில்லை போலும். அதேபோல நாம் அனைவரும் ஒன்றுப்பட்டு அதிகாரிகள் சங்கங்களும் நம்முடன் இணைந்து நிறுவனத்தின் வளர்ச்சி பணிக்காக 2007 ஜூலை 11 ல் நடத்திய வேலைநிறுத்தம் மகத்தானதல்லவா? இத்தகைய மகத்தான வரலாற்று சிறப்புமிக்க போராட்டங்களை விட நம்பூதிரி கூட்டணி ஆகஸ்ட் 19, 20ல் தனியாக நடத்திய பயனில்லாத இரண்டு நாள் வேலை நிறுத்தம் எவ்வகையில் வரலாற்று சிறப்புமிக்கது என்பது ஒருவருக்கும் விளங்கவில்லை.

கோரிக்கைகளை தீர்த்து வைக்க - ஏன் பேச்சுவார்த்தை நடத்தக்கூட நிர்வாகத்தை நிர்பந்திக்க இயலாத இரண்டு நாள் வேலைநிறுத்தத்தை வெற்றிகரமான வேலைநிறுத்தம் என தன் முதுகில் தானே தட்டி சபாஷ் போட்டுக் கொள்ளும் நம்பூதிரி சங்கத்தின் அற்பத்தனம் கண்டு நமது ஊழியர்கள் எள்ளி நகையாடுகின்றனர்.

## 27 சதவிகிதம் ஊழியர்கள் மட்டுமே பங்கேற்பு !

சென்னை தொலைபேசியில் பணிபுரியும் **9813** ஊழியரில் இரு நாட்களிலும் வேலை நிறுத்தத்தில் பங்கேற்றவர்கள் முறையே **2551** பேர் (**27** சதவிகிதம்), **2753** பேர் (**29** சதவிகிதம்) என நிர்வாகத்தின் புள்ளி விவரம் கூறுகிறது.

தமிழ் மாநிலத்திலும் இதே கதிதான். ஹரியானா, ஜார்கண்ட், மகாராஷ்ட்ரா, பீகார், ஜம்மு - காஷ்மீர், உத்தராகண்ட், ஒரிசா உள்ளிட்ட பல மாநிலங்களில் அங்கீகரிக்கப்பட்ட சங்கம் விடுத்த வேலைநிறுத்த அறைகூவலை ஊழியர்கள் முற்றிலுமாக நிராகரித்துவிட்டனர். ஆந்திரம், கர்நாடகம், குஜராத், உத்திரப்பிரதேசம், மத்திய பிரதேசம், ராஜஸ்தான் உள்ளிட்ட மாநிலங்களில் கூட வெறும் முப்பது சதவிகித ஊழியரது ஆதரவே வேலைநிறுத்தத்திற்கு கிடைத்தது. வழக்கம் போல கேரளம், மேற்கு வங்கம் மற்றும் வடகிழக்கு பகுதிகளில் ஊழியரை மிரட்டி தடுத்து நிறுத்தி வேலை நிறுத்தத்தை வெற்றியாக்கிவிட்டதாக நம்பூதிரி சங்கம் குதூகலிக்கிறது. “கீழே விழுந்தாலும் மீசையில் மண் ஒட்டவில்லை” என்பது போல எந்த பிரச்சனையும் தீரவில்லை என்றாலும் - பேச்சுவார்த்தைக்குக் கூட

நிர்வாகம் அழைக்காமல் அலட்சியப்படுத்திய பிறகும் அங்கீகரிக்கப்பட்ட சங்கம் இந்த போராட்டத்தை மகத்தான வெற்றியாக சித்தரித்து ஊழியரை ஏமாற்ற நினைப்பது கீழ்த்தரமான செயலாகும். "Operation Success but Patient died" என்பது இதுதானோ?

ஒன்றுப்பட்ட போராட்டமாக நடத்தப்பட்டிருந்தால் இத்தகைய தோல்வியையும் அவமானத்தையும் அங்கீகரிக்கப்பட்ட சங்கம் தவிர்த்திருக்கலாம். எனவே ஏன் ஒன்றுப்பட்ட போராட்டம் உருவாகவில்லை என்பது ஆய்வுக்குரியதே. 31.7.2009ல் அவர்கள் வேலை நிறுத்த அறிவிப்பை நிர்வாகத்திற்கு அளித்தார்கள். பின்னர் 3.8.2009ல் மற்ற சங்கங்களுக்கு போராட்டத்தில் இணைந்திட ஒப்புக்காக வேண்டுகோள் கடிதம் எழுதினார்கள். ஒன்றுப்பட்ட போராட்டம் நடத்திட அவர்கள் உண்மையிலேயே விரும்பியிருந்தால் வேலைநிறுத்த அறிவிப்பை நிர்வாகத்திற்கு தருவதற்கு முன்பே அனைத்து சங்கங்களையும் அழைத்து ஆலோசனை கலந்திருப்பார்கள். கோரிக்கைகளில் கருத்தொற்றுமையை உருவாக்கி இருப்பார்கள். ஆனால் இவையாவும் நடைபெறவில்லை. பிறகு எப்படி ஒன்றுப்பட்ட போராட்டம் உருவாகும்? தவிர போராட்டத்துக்கான கோரிக்கைகளில் இரண்டு மிகவும் சர்ச்சைக்குரியவை. முதலாவது பதவி உயர்வு திட்டம் குறித்தது. இரண்டாவது அங்கீகரிக்கப்படாத தொழிற்சங்கங்களின் உரிமைகள் பறிப்பு பற்றியது. இவ்விரண்டு கோரிக்கைகளையும் தொழிலாளர் கூட்டணி ஒரு போதும் ஏற்க முடியாது.

அதிகாரிகள் எவ்விதபாகுபாடும் இன்றி ஐந்து ஆண்டுக்கு ஒருமுறை பதவி உயர்வை ஏற்கனவே பெற்று அனுபவித்து வருகிறார்கள். எனவே பாரபட்சமற்ற வகையில் அதிகாரிகளுக்கு வழங்கப்பட்டது போல ஐந்து பதவி உயர்வுகள் ஐந்தாண்டுக்கு ஒருமுறைஊழியருக்கும் வழங்கப்பட வேண்டுமென்பதே நமது நிலைப்பாடு. மேலும் SC/ST ஊழியருக்கு இதில் இட ஒதுக்கீடு தொடரவேண்டுமென்பதும் நமது கோரிக்கை. இதற்கு மாறாக அங்கீகரிக்கப்பட்ட சங்கம் வெறும் மூன்று பதவி உயர்வுக்கு அதுவும் எட்டு வருடத்துக்கு ஒருமுறைதான் என உடன்பாட்டில் கையெழுத்திட்டது ஊழியருக்கு செய்திட்ட மாபெரும் துரோகமாகும். இத்தகைய துரோக உடன்பாட்டை அமுலாக்க அவர்கள் போராடினால் நாம் எப்படி அந்த போராட்டத்தில் நம்மை இணைத்துக் கொள்ள முடியும்? BSNL நிறுவனத்தில் அங்கீகரிக்கப்படாத சங்கங்கள் ஐம்பது சதவிகிதத்திற்கும் அதிகமான ஊழியரின் ஆதரவை பெற்றுள்ளன. என்றாலும் அங்கீகரிக்கப்படாத சங்கங்களுக்கு குறைந்தபட்ச தொழிற்சங்க உரிமைகள் கூட வழங்கக்கூடாது என அங்கீகரிக்கப்பட்ட சங்கம் கோரிக்கை வைத்தால் அதற்கு ஆதரவாக தன்மானமுள்ள எவரும் போராட முடியாது. எப்படியாவது (!) பதவிசுகத்தை அனுபவித்தால் போதுமென TEPU, BSNLMS போன்ற அங்கீகாரமில்லாத சங்கங்கள் வேண்டுமானால் தன்மானத்தை இழந்து நம்பூதிரிக்கு வால்பிடிக்கலாம். NFTE, FNTO மற்றும் தொழிலாளர் கூட்டணியில் இடம் பெற்றுள்ள மற்ற சங்கங்கள் எல்லாம் அங்கீகரிக்கப்பட்ட சங்கத்தின் தொழிற்சங்க உரிமைக்கு எதிரான போக்கிற்கு எப்போதும் ஆதரவு தர இயலாது. எனவே தான் இங்கு ஒன்றுப்பட்ட போராட்டம் உருவாகவில்லை. இதற்கான முழு பொறுப்பையும் அங்கீகரிக்கப்பட்ட சங்கம்தான் ஏற்க வேண்டும்.

## ஊதிய பேச்சுவார்த்தையில் தாமதம் ஏன்?

1.1.2007 முதல் நமது ஊழியருக்கு ஊதிய மாற்றம் அமுலாகியிருக்க வேண்டும். ஆனால் இரண்டரை ஆண்டு தாமதத்திற்குப் பிறகும் இப்பிரச்சனை இன்னமும் இழுபறியாக இருப்பதற்கு முழு முதல் காரணம் அங்கீகரிக்கப்பட்ட சங்கமே என்பது மறுக்க முடியாத உண்மை. அதன் மெத்தனப் போக்கினால் - அனுபவமற்ற தலைமையின் காரணத்தால் தான் இன்று 2.5 லட்சம் ஊழியர்கள் இக்கட்டில் உள்ளனர். அனைத்து அதிகாரிகளும் ஊதிய உயர்வை பெற்றுவிட்ட பிறகும் அடித்தள ஊழியர்களின் ஊதிய உயர்வை தாமதப்படுத்தும் நிர்வாகத்தின் படுமோசமான போக்கினை முறியடிக்க அனைத்து சங்கங்களையும் ஒன்றிணைக்க அது தவறிவிட்டது. நிர்வாகம் தொழிற்சங்கங்களிடையே உள்ள ஒற்றுமையின்மையை பயன்படுத்திக் கொண்டு ஊழியரை தொடர்ந்து ஏமாற்றுகிறது. வங்கி, நிலக்கரி மற்றும் துறைமுக ஊழியரின் அனைத்து தொழிற்சங்கங்களும்

ஒற்றுமையாக ஊதிய பேச்சுவார்த்தை நடத்துவதும் ஒன்றுப்பட்டு போராடுவதும் அவர்களுக்கு வெற்றியை தேடித்தந்துள்ளது. ஆனால் பி.எஸ்.என்.எல். நிறுவனத்தில் மட்டும் அங்கீகரிக்கப்பட்ட சங்கத்தின் மமதையின் விளைவாகவே ஒன்றுப்பட்ட ஊதிய பேச்சுவார்த்தை நடக்கவில்லை. ஒன்றுப்பட்ட போராட்டமும் நடைபெறவில்லை.

இந்த பலவீனத்தை புரிந்திருப்பதால்தான் 31.7.2009 ல் வேலை நிறுத்த அறிவிப்பு கொடுத்த பிறகும் 18.8.2009 வரை பேச்சு வார்த்தைக்குக்கூட அவர்களை அழைக்காமல் நிர்வாகம் அலட்சியப்படுத்தியது ; அவமானப்படுத்தியது. இருந்துங்கூட அவர்களுக்கு ஒற்றுமையைக் கட்ட வேண்டுமென்ற அக்கறையுமில்லை; ஆர்வமுமில்லை. "ஒன்றுப்பட்டால் உண்டு வாழ்வு. நம்மில் ஒற்றுமை நீங்கிடின் அனைவர்க்கும் தாழ்வு" என்ற பாடல்வரிகள் அங்கீகரிக்கப்பட்ட சங்கத்தினருக்காகவே எழுதப்பட்டது போல தோன்றுகிறது.

## அராஜகம் செய்வதை அனுமதியோம் !

வேலைநிறுத்தம் என்ற பெயரால் அங்கீகரிக்கப்பட்ட சங்கத்தினர் DGM(A) அலுவலகம், பூக்கடை வளாகம், அண்ணாநகர் CSC, கோடம்பாக்கம் DGM (West) அலுவலகம், கிண்டி GM (South) அலுவலகம், கிரீம்ஸ்ரோடு DGM (Central) அலுவலகம் உள்ளிட்ட பல இடங்களில் நமது தோழர்களிடம் குறிப்பாக பெண் ஊழியர்களிடம் மிகவும் கேவலமாக நடந்து கொண்டனர். மிரட்டுவது, ஆபாசமாக திட்டுவது உள்ளிட்ட அனைத்து வகைகளிலும் நமது தோழர்கள் துன்புறுத்தப்பட்டனர். சில இடங்களில் கேன்டீன்கள் கட்டாயமாக மூடப்பட்டன. நிர்வாகம் இவற்றை வேடிக்கைப் பார்த்துக் கொண்டிருந்தது. அதன் பொறுப்பற்ற தன்மைக்கு இவை உதாரணமாகும். அப்பாவிகளான ஒப்பந்த தொழிலாளர்களை ஏமாற்றி வேலைநிறுத்தத்தில் ஈடுபடுத்தியதால் பல இடங்களில் அவர்களுக்கும் பிரச்சனை ; வேலைக்கு வந்த ஊழியருக்கும் பிரச்சனை. பூனை கண்ணை மூடிக்கொண்டால் பூலோகமே இருண்டுப்போனதாக நினைக்குமாம் என்ற பழமொழிக்கு ஏற்ப அங்கீகரிக்கப்பட்ட சங்கத்தினர் தாங்கள் பணிக்கு வரவில்லை எனில் கேன்டீன்கள் இயங்கத் தேவையில்லை ; கழிவறைகள் சுத்தம் செய்யப்பட தேவையில்லை என்று கருதியது ஆணவத்தின் உச்சக்கட்டம். தங்களது வேலைநிறுத்தம் தோல்வியடைந்ததால் ஏற்பட்ட வெறுப்பால் - விரக்தியால் அவர்கள் நடத்திய அராஜகங்களுக்கு நிர்வாகம் உரிய நடவடிக்கைகளை எடுக்க உடனடியாக நாம் வற்புறுத்துவோம்.

## ஒன்றுப்பட்டு போராடினால் மட்டுமே வெற்றிப் பெற முடியும்

இந்த போராட்ட தோல்வியிலிருந்து அங்கீகரிக்கப்பட்ட சங்கம் படிப்பினைகளை பெற வேண்டும் என உளமாற விரும்புகிறோம். கோரிக்கைகளில் கருத்தொற்றுமை உருவாக்குவதுடன் ஊதியமாற்றத்துக்கான பேச்சுவார்த்தைகளில் அனைத்து தொழிற்சங்கங்களும் ஒன்றுப்பட்டு பங்கேற்க அது வழிகாண வேண்டும். முதல் ஊதிய உயர்வு பேச்சு வார்த்தையின் போது இம்மாதிரியான அணுகுமுறையைக் கையாண்டுத்தான் போராட்டமே இல்லாமல் பேச்சுவார்த்தையின் மூலம் நல்ல ஊதிய உயர்வை ஊழியருக்கு நாம் பெற்றுத்தந்தோம். அதே நிலைப்பாட்டை இப்போது கையாண்டால் அதிகாரிகளுக்கு இணையான ஊதிய உயர்வை 2.5 லட்சம் ஊழியரும் தாமதமின்றி பெற முடியும். தொழிற்சங்கங்கள் அனைத்தும் ஒன்றுப்பட்டு கோரினால் நிர்வாகமும் அதை ஏற்காமல் தட்டிக் கழிக்க முடியாது. அதன் பிரித்தாளும் சூழ்ச்சிக்கும் இடமில்லாது போகும். எனவே வீண் பிடிவாதத்தையும் வறட்டு கௌரவத்தையும் அங்கீகரிக்கப்பட்ட சங்கம் கைவிடவேண்டும். இல்லையெனில் இங்கு ஒன்றுப்பட்ட போராட்டம் வரவாய்ப்பில்லாது போகும். அப்படியொரு மோசமான நிலை எதிர்காலத்தில் மீண்டும் ஒருமுறை நிகழ்ந்திட்டால் அதனால் அதிகம் பாதிக்கப்படப் போவது நமது ஊழியர்கள்தான். எனவே அங்கீகரிக்கப்பட்ட சங்கம் அனைத்து சங்கங்களையும் ஒருங்கிணைக்கும் பணியில் உடனடியாக ஈடுபடவேண்டுமென மீண்டும் வலியுறுத்துகிறோம். அதைவிடுத்து மாற்றுச் சங்கங்களையும் அதன் தலைவர்களையும் கேவலமாக விமர்சிப்பதால் ஒற்றுமையை அதனால் ஒருபோதும் கட்டமுடியாது என்பதை இனியாவது அவர்கள் உணரவேண்டுகிறோம்.

# கருத்தரங்கம்

**இரண்டாவது ஊதிய மாற்றம் தாமதம் ஏன்?**
**ஒன்றுப்பட்ட போராட்டம் உருவாக தடையாக நிற்பது யார்?**

**07.09.2009 (திங்கள்) பகல் 2 மணி - ஏ.கே. நாயக் பவன் (C.T.O. அருகில்)**

**தலைமை : தோழர் S. லிங்கமூர்த்தி**
NUBSNLWU - FNTO

தோழர் C.K. **மதிவாணன்**
**NFTE-BSNL**

தோழர்R. **பட்டாபிராமன்**
**NFTE-BSNL, தமிழ்நாடு**

தோழர் D. **சந்திரசேகரன்**
**NUBSNLWU-FNTO, தமிழ்நாடு**

தோழர் M.J. **வினோத்குமார்**
**BSNLEC**

தோழர் C. **அன்புராஜ்**
**BSNL - ATM**

தோழர் E. **பிரபாகரன்**
AIOBC (BSNL)

**அனைவரும் வருக ! பயன் பெறுக !!**

**BSNL தொழிலாளர் கூட்டணி**
**சென்னை தொலைபேசி**